உ

கழுகாசலபதி துணை.

# சமுத்திர விலாசம்

சந்திரகுலமஹாராஜராகிய

எட்டயபுரம்

சமஸ்தானத் தாதீன கர்த்தர்

ஜெகவீர ராம வெங்கடேசுர எட்டப்ப

மகாராஜ ஐயன் அவர்கள்பேரில்

ஷையூர் புலவர்குல திலகராகிய

**கடிகைமுத்துப் புலவரால்**

**இயற்றியது.**

ஷை பிரபுவின் வழிவழி மரபின் இந்நாள்

எட்டையபுரம் சமஸ்தானத்தில் மகுடாபிஷேக

கர்த்தராய் விளக்கும்

ஜெகவீரராம வெங்கடேசுர

எட்டப்ப மஹாராஜ

ஐயனவர்கள் உத்தரவுப்படி

கொல்லபட்டி ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ

இராமசாமிக் கேச்சிலப்ப பூபதியவர்கள்

அனுமதிப்படி தமது

நே. சுப்பிரமணிய பிள்ளையால்

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

GP
O-IV, Samu

உ

வேலுமயிலுந்துணை.

# நேரிசை யாசிரியப்பா.

கதிர்வேற் பெருமான் கழுகா சலபதி
பாதமலர் மறாத பாக்கிய குபேரன்
பழந்தமிழ்க் குடிவளர் பாண்டிமண் டலத்திற்
றழைந்திவர் முதுகுடித் தண்ணடை யின்கணே
யெட்டய புரத்தர சினிதுசெய் தோங்குங்
கட்டளைச் செங்கோல் கைக்கொளு நிருபன்
படிபுகழ் வெங்கடே சுரெட்டபூ பாலன்மேற்
கடிகைமுத் துக்கவிக் களஞ்சியஞ் சொல்லிய
தமிழ்மணங் கமழ்தரு சமுத்திர விலாசநூல்
அமிழ்தினு மிகவினி தாமெனத் தேர்ந்துள
பாவலர் விழைதர பண்டிதர் விழைதர
நாவலர் விழைதர நாடெலாம் விழைதர
அத்தகு கதாநா யகனுயர் மரபினில்
வித்தக னாகி விளங்கியிந் நாளிற்
றுறைதெரி முத்துச் சுவாமிபெட் டமசுதன்
பொறைநிகர்புயங்களிற் பூப்பொறைதாங்கியோன்
வெங்கடே சுரெட்டமன் வேண்டுவார் வேண்டுவ
பொங்கருள் கூர்ந்தருள் பூமன் மகிழ்ந்தனை,
அச்சிவிட் டுதவுவா னருள்செய நபனுணர்ந்
திச்சையாற் கோல நகரையா ளிறைவனும்
இராம சாமி கெச்சிலப் பேந்திரன்
பாரவுமிந் நூலைப் பார்த்தகங் களிகூர்ந்
தணிபெறப் பதிப்பித் தருளினன் ,
மணிவளர் தருபுவி மகிழ்தர வாழ்கவே.

ஜெ. சுப்பிரமணிய பிள்ளை,

கோல்லபட்டி சமீன்;

உ

பரமபதிதுணை.

# சமுத்திரவிலாசம்.

## கழிக்கரைப் புலம்பல்.

காப்பு.

### விநாயகர்துதி.

விருத்தம்.

விருதிடு சரண ராசன்
வெங்கடே சுரவெட் டேந்த்ரன்
ஒருதிடப் புருடன் கீர்த்தி
யுயர் சமுத்திர விலாசங்
கருதிடத் தமிழாற் சொன்னேன்.
கயமுகத் தசுரன் வீழப்
பொருதிடர் களையத் தாக்கும்
புகர்முகக் களிறு காப்பாம்,

## பாட்டுடைத்தலைவன் சிறப்பு.

க

பார்பொருந்திய மேன்மைதங்கிய
பாரதிண்புய பூதரன்
பங்கயாசன மங்கைமேவிய
சங்கபாணி நிகர்த்தவன்

கூர்பொருந்திய வேலெடுத்த
குமாரவெட்டன் வரத்தினாற்
குவலயத்தரசு செயமுளைத்தநய
குணவிதட்சண விவேகவான்

கார்பொருந்திய கொடையினைழகு
கண்டுமாதர்மட லெழுதவே
காமனைப்பொருது சோமனைக்குடை
கவித்தராச துரந்தரன்

வேர்பொருந்திய தாருவின்புடை
மேவுமிந்திர னுமென
வெங்கராசல தந்தியேறிய
வெங்கடேசுர வெட்டனே.

## இதுவுமது.

—•◇•—

உ

ஸரசமண்டப வனிதைதங்கிய
மருமனம்புவி யாளவே
வந்தவன்செக வீரராம
வரோதயப்பெயர் நாட்டினேன்

கனகதண்டிகை யதிபனந்துரை
கசதுரங்க தளத்தினன்
கடன்முழங்கிய தெனமுழங்கிய
கவிதைகொண்டுயர் வாசலான்

தனதனென் றுநிதி வளரவுங்கிளைஞர்
தழையவும் புதுமையாகவே
சட்டமுஞ்செய்த வெங்கடேசுர
வெட்டமன்கரு ணாகரன்

தினமுமந்தணர்க டவமிகுந்தவர்கள்
செயலறிந்தமு தருத்தியே
சிவனையும்பெரிய குருவையுந்தொழுது
செல்வநாளும் வளர்ப்பனே.

## பாட்டுடைத்தலைவன்வரும் பவனிக்குங், கடலிற்குஞ் சிலேடை.

### அடிமடக்கு.

௫

தொடுத்த வாரங் கடவாமற்
சூழ்கம் பளமும் பிரியாமற்
றொலையாச் சங்கந் திரண்டுவரத்
துணைத்தோணிவந்து பொன்னேந்த

அடுத்த வாய்மை கடவாம
லவனி தனிலே தொட்டுமிகுந்
தார்க்கு மினம்போர் செயம்படைக்க
வங்கே யாழ நிலையாமல்

எடுக்குங் கயமுங் குதிரையுங்கொண்
டெங்கோன் வெங்க டேசுரெட்ட
னெய்தும் பவனி போலவெனக்
கெதிரே தெரிந்தாய் கருங்கடலே

தடுக்குமணையும் பொருவாய்நீ
தடுக்குமணையும் பொருந்தேனுன்
தப்புத்த ரமேசொல்லேன்மி
தப்புக்க ராமற்கேட்பாயே.

## கடலிற்குந், தலைவிக்குஞ்சிலேடை.

### அடிமடக்கு.

௪

திருவும் பிறையு முன்றோற்றத்
திருமா லையும்பின் னேதாங்கிச்
சேரு மோதி மங்குலுக்குஞ்
சிறப்பா வகமுங் காட்டுவைநீ

திருவும் பிறையு முன்றோற்றத்
திருமா லையும்பின் னேதாங்கிச்
சேரு மோதி மங்குலுக்குஞ்
சிறப்பா வகமுங் காட்டுவனான்

பருவ முகில்போற் கொடுத்துநம்மைப்
பரிப்போன் வெங்க டேசுரெட்டன்
பவனி யடுத்து வருவேன்முன்
பவனி யடுத்து வருவாய்நீ

இருவர் நாமு மொப்பாமென்
றிருந்தோங் கடலே கழிக்கரையே
யிரையுந் திரையின் மீனேசங்
கினமே யினமே கேட்பீரே.

## கடைமடக்கு.

௫

உள்ள திருக்கை காணீரே
யுறங்கா திருக்கை காணீரே
யோசைக்கடலைப் பொரு மலையே
யொழியேன் விரகப் பொரு மலையே

கள்ளரு தாங்குவளைகளே
கழலுங்கரந் தாங்குவளைகளே
கரையிற் படாத் துப்பீரே
கலந்த துடலத் துப்பீரே

அள்ள லளையுங் களிக்கரையே
யழைப்பார் மாதர் களிக்கரையே
யாறு வகுப்புக் காற்றேனே
யாழிப்.பூடைப்புக் காற்றேனே

வெள்ள மூரும் பானத்தே
விரும்பா திருந்தேன் பானத்தே
வெங்கடேசு ரெட்டனையே
மேவத்தடுக்கு மெட்டனையே.

## கடைமடக்கு.

சீர்

காலை யலராக் கழுநீரே
கண்ணீர் முலையைக் கழுநீரே
காட்டுத் தால மாமடலே
காம னெடுக்கு மாமடலே

சோலை நாகப் பரப்பணையே
தொடப் பொறேன்பூப் பரப்பணையே
துறைவா னூகத் துறுமனமே
துடிக்கு மாலைத் துறுமனமே

சேலை விரட்டுஞ் சிறைக்குருகே
சிறியே னிருக்குஞ் சிறைக்குருகே
திரண்முத் தினுஞ் செவிக்கம்பே
திரையோ சையுமென் செவிக்கம்பே

வேலை கொழிக்கு மென்னுரையே
வெறுப்பா மெவர்க்கு மென்னுரையே
வெங்க டேச ரெட்டனையே
மேவத் தடுக்கு மெட்டனையே.

## கடைமடக்கு.

எ

மருக்கு லாவு கேதகையே
மாறு தொருத்திக் கேதகையே
வருத்த மெனக் கோபானலமே
வளருங் குயிற் கோபானலமே

இருக்குந் தாராக் குஞ்சினமே
யென்மேன் மடவார்க் குஞ்சினமே
யிருன்மீன் பாயு மிடக்கயமே
யெடுத்தான் மதனு மிடக்கயமே

ஒருப்புக் குழப்பமாற்றலையே
யுள்ளக் குழப்பமாற்றலையே
யோடித் திரியு மாமதியே
யுருப்படைங் கொடுக்கு மாமதியே

விருப்பங் கூரு மோதிமமே
விடியா திருக்கு மோதிமமே
வெங்க டேசு ரெட்டனையே
மேவத் தடுக்கு மெட்டனையே.

## மன்மதனுக்குங், கடலிற்குஞ் சிலேடை

### அடிமடக்கு.

அ

கருப்பஞ் சிலையை வேளெடுத்தான்
கருப்பஞ் சிலையை நீயெடுத்தாய்
கங்கு லாவும் பலவனுக்கே
கங்கு லாவும் பலவுனக்கே

மருப்பங் கயமே வனங்கருக்க
மருப்பங் கயமே வனங்கறுத்தாய்
மதமா தனையு மலைப்பதுஞ்சம்
மதமா தனையு மலைத்தாயே

திருக்கு லாவு மணிமார்பன்
செயமால் வெங்க டேசுரெட்டன்
சேரா வேளை யடிக்குமுர
சேரா வேளை யழைத்தாயே

தருக்கண் டலஞ்சூழ் வாரிபர
தருக்கண் டலைஞ்சி யிருந்தேனே
சகிமா ரனைநே ரிலையேவஞ்
சகிமா ரனைநே ராவாயே.

## கடலிற்கும், பொதியமலைக்குஞ் சிலேடை.

### கடைமடக்கு.

—oo:o:oo—

௬

நெடிய வானந் தொடுமேயு
நிலையா மாமை முதுகோடு
நீங்கா திருக்குங் கடுந்திரையு
நீளு மாரம் பிறைத்தடுக்கும்

வடிவி னுற்கப் பலைத்தடவி
வாங்குங் கடனேர் பொதியவரை
மாமால் வெங்க டேசுரெட்டன்
மனது மகிழுங் கடற்றுறைவாய்ப்

படியு மானத் தவளைகளே
பரிபோ னதுமத் தவளைகளே
படரும் வாரி நடுக்காரே
பவுரு நகைக்க நடுக்காரே

கொடியாய்ப் படரு நெய்தலமே
கொங்கை மார னெய்தலமே
கோதை யாரு முலைத்தாரே
கொடுப்பா ரிலையா முலைத்தாரே.

1937

## சிவனுக்கும் பொதியமலைக்குஞ் சிலேடை.

கடைமடக்கு.

௰

நிறைவாய்ச் சங்கங் குழைதவழ
நித்த மருவி யமைவிளங்க
நிமிர்கந் தரமா லங்காட்ட
நீளு மரவந் தலைபொருந்த

இறையோ னிகரும் பொதியவரை
யெங்கோன் வெங்க டேசுரெட்ட
னிளசைக் கதிப னுளமகிழு
மெழிற்கா னலஞ்சேர் கழிக்கரையே

மறைவா யிருந்த வோரலவா
மடவா ரெனைவை வோரலவா
மடியின் முருகு வாரிலையே
மனிது முருகு வாரிலையே

உறைவா கியவெம் பணைக்காடே
யுணவா மோவெம் பணைக்காடே
யுள்ளக் கவலை யாராலே
யொழிப்பே னுரைப்பா யாராலே.

## முன் மாதர்முலைக்கும், பொதியமலைக்குஞ் சிலேடை; பின் கழிக்கரைக்கும், பெண்பாலுறுப்புக்குஞ் சிலேடை.

௰க

வாரு மார முந்தியிட
மறைக்கு மாறு புடைத்துவர
வருதே மலைக்கொண் டலர்வனமேன்
மாறாக் கிள்ளை யுடன்பொருந்தச்

சேரு மாதர் முலைபோலத்
திகழும் பொதிய வரைவேந்தன்
செயமால் வெங்க டேசுரெட்டன்
சேரா ரளிற் கழிக்கரையே

சாருங் கோண முகம்பொருந்தச்
சந்த தநந்தாங் கப்புடைக்கத்
தருகா வேலைக் கண்ணகைச்
சாதித் தருவா யிடைகாட்ட

ஊரு வரம்பை நீதாக்கி
யுண்ணீ ரூறுங் கடிதடமு
முன்பா லிருக்கப் பெண்பாலா
முறுப்பர் லெலையும் வெறுப்பாயே.

முன் கார்காலத்திற்கும், பொதியவரைக்குஞ் சிலேடை.

பின் கடலிற்கும், தலைவிக்குஞ் சிலேடை.

௰௨

மின்னு மணியாய் விளங்கவதின்
மிகுந்த கோப முடனுக
மேவத் தலையி லிந்திரவில்
வெளியாக் காட்டக் கார்காலம்

என்னும் பொதிய வரைக்கதிப
னெங்கோன் வெங்க டேசுரெட்ட
னென்னைப் பிரிந்தா னுனைப்பிரிந்த
தெவரென் றறியேன் வாரிதியே

உன்னு மலைப்பா லுள்ளமச்ச
மூரு மதனு லீவாரி
யுண்ணுத் தினமுங் கசந்தாவி
யோட வோட மாட்டாமற்

பின்னுங் கானு முடனடுக்கப்
பெலத்த நாவா யசைக்கவரும்
பெருமைக் கடலே யாசைகொண்ட
பெண்மைக் கடலா யிருந்தாயே.

முன் மருதநிலத்திற்கும், பொதியமலைக்குஞ் சிலேடை.

பின் கடலிற்குஞ், சிவனுக்குஞ் சிலேடை.

௰௫

குருகு படரக் கதிருடனெற்
கோட்டை யளந்து கட்டவயற்
குலாவு வனசங் தமரமொடு
கூடக் காலா றுவண்டுவர

மருத நிகரும் பொதியவரை
மன்னன் குமார வெட்டமன்சொன்
மதவேள் வெங்க டேசுரெட்டன்
மருவா நாளிற் பொருகடலே

பெருகு மரவ மேற்கொண்டு
பெருந்தீ வாரக் கண்பொருந்திப்
பெண்ணை யொருபாற் கலந்துள்ளே
பெலத்த விரும்பார் காணுமற்

கருது சிவனைப் போலிருந்துங்
காமன் றனக்கு முரசறைந்தாய்
கண்டங் கருமை காணிலுனைக்
கண்டங் கருமை செய்வேனே.

## சந்திரனுக்கும், வைகையாற்றிற்குஞ் சிலேடை.

### அடிமடக்கு.

௰௪

வானந் தரித்து வரலாலும்
வளைந்து பரந்த மீனாலு
மாறுக் கோட்டை யுறலாலு
மணலை மேலாக் கொளலாலுந்

தானந் தவறு மதிபோலுந்
தடநீர் வைகைத் துறைக்கதிபன்
சமர்வேள் வெங்க டேசுரெட்டன்
றழுவா நாளிற் கழிக்கனையே

மீனங் கொடுக்கு நீயெனக்கு
மீனங் கொடுக்கு ம்வகையறியாய்
மேவம் பரமே நீபகையா
மேவம் பரமே போலறுக்கும்

பானந் தாரா வறியவனட்
பானந் தாரா வறியாதே
பந்த வராலே யனங்கர்கருப்
பந்த வராலே மெலிந்தேனே.

## பிரமனுக்கும், வைகையாற்றிற்குஞ் சிலேடை;

### அடிமடக்கு.

௰௫

பூவிற் பொலியு மாந்தனையும்
பொருந்தப் படைக்கும் பாரதிக்கும்
புகலா வோட்டந் தருநாலு
புறமு முகந்தங் கும்பெருகுக்

தேவிற் பிரம னிகராகுஞ்
செழுநீர் வைகைத் துறைக்கதிபன்
செயமால் வெங்க டேசுரெட்டன்
சேரா நாளிற் கழிக்களையே

காவிக் கனமாம் பூவேநீங்
காவிக் கனமாம் பூவோரே
களைவாய்ப் படவே பாலொடுசேர்க்
களைணாய்ப் படவே சகியேனே

பாவிப் படியு ம்வண்டேயப்
பாவிப் படியு மெலிவேனோ
பயவா ரணமே யிளையாமற்
பயவா ரணமே புரிந்தாயே.

முன் மன்மதனுக்கும், வைகையாற்றிற்குஞ் சிலேடை.

பின் கடலிற்குந், தலைவிக்குஞ் சிலேடை.

அடிமடக்கு.

௰௬

காலி லேறி யப்பர்குளக்
கண்ணி லடங்கி மொத்துண்டு
கணையு முருவு மானதனாற்
காட்டும் போக நடத்துமதன்

போலும் வைகைத் துறைக்கதிபன்
புகழ்சேர் வெங்க டேசுரெட்டன்
புலவர் தமக்குப் புரிகருணை
போலே நிறைந்த பனிக்கடலே

மாலி னாலுங் கலக்கமுற்றாய்
மாலி னாலுங் கலக்கமுற்றேன்
வையை முடுக்க வருவையனை
வைய முடுக்க வருவேனான்

நீலங் கையிலுந் தொடுவைமத
னீலங் கையிலுந் தொட்டிடுவா
னேமித் திடர்நீ யுன்னையென்போ
னேமித் திடர்நா னணைத்தேனே.

முன் புவிவனிதைமாலைக்கும், வைகையாற்றிற்குஞ்
சிலேடை.

பின் மன்மத பாணங்களுக்கும், கடலிற்குஞ் சிலேடை.

———

௰எ

காரங் கிளைத்துச் சுற்றவத
னடுவே வண்டு தலைநீட்ட
நாடு மேடு நனைக்குமது
நன்னீ ராகப் புவிவனிதை

ஆரம் போல விசைந்தவைகை
யாற்றுக் கதிபன் றமிழருமை
யறிவோன் வெங்க டேசுரெட்ட
னணையா திருந்தான் வாரிதியே

பாரங் காட்டுஞ் சிலையாலும்
பற்றி யிருக்கு நாணாலையும்
படிமேற் கொண்ட விருப்பாலும்
பாத்தி யெடுப்பா னெய்தலினாற்

றீரம் பொருந்த வந்துதைக்குந்
திறத்தா லம்பு ராசியென்றே
செப்பும் பெயரா மெய்யாக்கிச்
சேரா நெஞ்சைத் துளைத்தாயே.

## அடிமடக்கு.

௰அ

தரையே மழையுமுன் னளந்துவிபு
தரையே முழுதும் புரந்துநிரு
தரையே சினந்து துறந்தவிர
தரையே நிகரா வடிவெடுத்த

விரைசேர் குழலார் மடலெழுதும்
வேந்த னிளசைக் குமாரவெட்டன்
வெங்க டேசு ரெட்டனெனை
மேவா நாளிற் பனிக்கடலே

கரைகா ணுத வேலையென்றே
காமன் கணைக்கு வேலைதந்தாய்
கடவுள் கிறுஞ் சக்கரம்போற்
கடுஞ்சக் கரமாப் பேரெடுத்தாய்

திரையோ சையினு லாசைகொண்டோர்
செவியிற் புகுந்து துளைப்பதனுற்
றெரியம் பரமென் றுன்பேரைத்
திகாந்த வரைக்குஞ் சொல்வாரே.

முன் கண்ணனுக்கும், முதுகுடிநாட்டிற்குஞ் சிலேடை.

பின் தலைவிக்கும், கடலிற்குஞ் சிலேடை.

௰௧

ஆலுங் கரும்பை மிதித்தேறி
யடரும் பகடு கோடுடைத்து
மப்பாற் கஞ்ச னடிவாளை
யகற்றி நிரைக்கா வேய்ங்குழலுங்

கோலுஞ் சுமந்தோன் போலுமுது
குடிநன் னாட னெமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசுரெட்டன்
கொடை போற் றழைத்தநெடுங்கடலே

ஏலும் படிக்குத் திரைக்குள்ளே
யிருப்பா மஞ்சங் கிடைகாட்ட
வெழிற்பா யலையும் விரித்தமளி
யிட்டு நடுவே யணைபொருத்தி

மேலுந் தடவிக் கால்வருட
விழியு முறங்கா யெனைப்போல
வெள்ளப் பாவா யுன்னையெவர்
மேவிப் பிரிந்தா ரறியேனே.

12331


முன் குரங்கிற்கும், மாவிற்குஞ் சிலேடை.

பின் கடலிற்கும், நாடகக்கணிகைக்குஞ் சிலேடை.

---

உ௰

உரங்கொண் டிருக்கு மாக்கனியை
யுந்திக் கமலத் துறவேத
னேங்கு கையினா லளிக்குமரு
ளுடனே பொருந்தும் வனந்தரிக்கும்

குரங்கு மால்போ லிருக்குமுது
குடிநன் னாட னெமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசுரெட்டன்
கூருங் கருணை நிகர்கடலே

அரங்க நீங்கி யம்பலம்வந்
தாட வரைச்சேலையுந்தலைமே
லாக்கிக் குதித்தா யுன்னாழ
மானா லறியுந் தரமாமோ

இரங்க வாரந் தரங்கமெடுத்
தெறிந்து போட்ட நீயலவோ
வீந்தப் படியே யாருமுனை
வெறிநீர் வேலை யென்பாரே.

## சத்திரத்திற்கும், முதுகுடிநாட்டிற்குஞ் சிலேடை.

அடிமடக்கு.

உக

ஆமாம் பழனங் குளத்துடனே
யளையுந் தேனுங் குழப்பியபா
லன்னம் பொருந்த வுண்டுபணி
யார மெடுத்து வரப்படைத்துக்

கோமான் வெங்க டேசுரெட்டன்
கொடுக்குந் தான சத்திரம்போற்
குறைவில் லாமல் வளர்ந்தமுது
குடிநன் னாட்டுப் பெருங்கடலே

காமா விடமா தரித்தவஞ்சக்
கரவா னவனுக் களித்தாயே
காமா விடமா தரித்தவஞ்சக்
கரவா னவமோ விதுவெனவே

ஏமா றுவனே வவனுமிருந்
தேமா றுவனே நானுமையோ
வீரம் படைத்த வாரிவிழி
யீரம் படைக்கக் காணேனே.

## மணக்கோலவிராமனுக்கும், முதுகுடிநாட்டிற்குஞ் சிலேடை.

உஉ

சால மரத்தே மூடுதத்தத்
தள்ளு மதுக்கே சரந்தாங்கத்
தருவி லமைத்த கனிகலக்குஞ்
சாறு பெருகப் பெருகமணக்

கோல ராமன் போலுமுது
குடிநன் னுட னெமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசுரெட்டன்
குலாவுங் கருணை நிகர்கடலே

சூல பாணிக் குணவளித்தாய்
தொண்டை புகுமுன் சத்திவந்து
தொடுத்து விழுங்க வொட்டாமற்
சூட்டான் மிடறு கறுத்திருந்தான்

வால மதியு முன்னிடத்தில்
வந்து சூடு பட்டதன்றோ
மறுவாய்க் கறுத்த துன்சூடு
மட்டோ வபய மிட்டாயே

## மேகத்திற்கும், குயிலிற்குஞ் சிலேடை.

### அடிமடக்கு.

உரு.

மேவுங் கறுப்பாற் பயந்தாரை
விட்டுக் காலால் விசைத்தெழும்பி
விரிவாம் பக்கஞ் சுற்றிவந்து
வேண்டுங் குயில்போற் சோலைதொறுங்

கூவுங் குயில்வந் திருக்குமுது
குடிநன் ளுட னெமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசுரெட்டன்
கொடைபோற் பெருகு நெடுங்கடலே

காவும் படைவீ டானவற்குக்
கடின முரச நீயென்மூலை
கடின முரச மன்னவனைக்
கலந்நாங் கிருந்தாற் கலந்தாங்கி

ஏவுந் தரங்கத் தரியேவே
ளேவுந் தரங்கத் தரிக்குமன்பா
யிரங்கா தவருக் கென்விடா
யிரங்கா தமும்போ லிருந்ததுவே.

## புலவருக்கும், மேகத்திற்குஞ் சிலேடை.

### அடிமடக்கு.

உச

சாரம் படைக்குங் கவியுமிசை
தாங்கும் படிக்கு மத்தமுன்னே
சத்தங் காட்டி யுள்ளுறையுந்
தானே விரிக்கும் புலவரைப்போற்

காரங் கிருக்கு மணிமாடங்
காணு மிளசை புரக்கவந்த
கதிர்வேல் வெங்க டேசுரெட்டன்
கருத்துக் கிசைந்த கருங்கடலே

ஆரங் கொழிப்பா யுனைக்காணி
லாரங் கொழியார் கும்பமுனி
யடுத்தா னெடுத்தா னுற்றும
லந்தோ பொதிய மலைசேர்ந்தான்

மாரன் புடைப்பா னுனையெனக்கு
மாரன் புடையா ரெனைப்பொதிய
மலைவா யிருந்து வருந்தாமல்
மனையி லிருத்திப் புரப்பாயே.

## அடிமடக்கு.

உரு

தினக ராதி பனைக்காணிற்
செல்லா திருந்த பிறைபோலத்
தேனைத் தடுக்க வொற்றைவண்டிற்
றெற்கும் வடக்கு மாப்புரட்டக்

கனக மாட மீதுகொடி
கட்டு மிளசை புரக்கவந்த
கதிர்வேல் வெங்க டேசுரெட்டன்
கருத்துக் கிசைந்த பெருங்கடலே

தனமே முத்தம் பொரிந்ததுசங்
தனமே தரியேன் சயனமுறா
தனமே யான தன்றிலசே
தனமே யெனவு நினைப்பேனே

வனமே நிரம்பி மரகதம்போல்
வனமே படைத்தா யெனக்காக
வனமே கொடுத்தாய் மான்மிகுந்த
வனமே தணிக்க மாட்டாயே.

## இந்திரனுக்கும், மேடைக்குஞ் சிலேடை.

உசு

விண்ணு டருக்கன் புறமேக
மேலா யுருவச் சிரமேந்தி
வெள்ளி பதுங்க மஞ்சூர
வெளிவாய்ச் சிந்தா மணியமையக்

கண்ணு யிரத்தான் போன்மேடை
காணு மிளசைப் பதிபுரந்த
கதிர்வேல் வெங்க டேசுரெட்டன்
கருத்துக் கிசைந்த பெருங்கடலே

பெண்ணு கியசெந் திருவையுநீ
பெற்று யவஞீ மாரனையே
பெற்று ளந்த மாரனுமுன்
பேர னுனக்கு மிரக்கமுண்டோ

உண்ணு விரத மாயிருந்து
முயரத் தேர்டம் வரவிசைக்கு
முன்பா விடந்தந் தாயுனையு
மூரிற் குடியென் றுரையாரே.

## இடைமடக்கு.

உஎ

அவிரு மதிநாடக த்தின்மயி
லமரு மதிநாடக க்காட்டு
மணிசேர்த் தண்டத்தடுக்கு மெயி
லதுபோய்த் தண்டத்தடுக்கு முகில்

நவிலு மளகை நகரிளசை
நகரோன் சனகன் சிலைபார்த்து
நகைத்தோன் வெங்க டேசுரெட்ட
னயனம் போலும் பெருங்கடலே

புவி முன்னேயம்பரமா கப்
பூகு முன்னேயம்பூரமா னேன்
பொருந்த வேலையாய்வளை வூய்
போட வேலையாய்வளை யே.

குவியு மலைக்கத்தக்கவ னங்
கொண்டே மலைக்கத்தக்கவ ணன்
குறையா வனசக்கரமட வாய்
கொண்டேன் வனசக்கரமட லே.

## அடிமடக்கு.

உஅ

கலையே பழகித் துரோபதிக்குக்
கலையே வழங்கி மிதிலைவழிக்
கலையே யுருவாக் கண்டுபிறங்
கலையே குடையா வெடுத்துநின்ரோன்

சிலைவேள் கதிர்வே லெடுத்துவருஞ்
செயவேள் வெங்க டேசுரெட்டன்
சித்த மகிழுஞ் சந்த்ரகிரி
செழிக்க முழக்குஞ் செயுங்கடலே

அலையே கொழித்துப் பின்னையுங்கா
யலையே மமைத்து நீயிருந்தா
யலையே விடியக் காணேன்மை
யலையே யுரைத்தா லறியாயே

இலையோ விரக்க முனக்குமெங்க
ளிலையோ மதனும் வளைப்பதுவெய்
யிலையோ கொடுக்கு மதியுரைக்கை
யிலையோ வெனவு முரையாயே.

## அடிமடக்கு.

உ௬

களக மெனவே யிருந்தவிந்தை
கருத்து மகிழ்ந்து நகைத்ததுபோற்
கருதார் புறந்தந் தகைப்புயங்கள்
கண்டு நகைத்துக் கொண்டதுபோற்

றுளவ மலனா வனைர்தசய
தரமால் வெங்க டேசுரெட்டன்
தமிழுக் குதவு நிதிபோலத்
தானே வளருஞ் சலநிதியே

வளமைக் கடலே யெனைநெருங்கு
வளமைக் கடலே பிரதானம்
வாரி யிடமே மதன்கணையை
வாரி யிடமே கலையிழந்தேன்

உளமத் தனையு மயலாகி
யுளமத் தனையு மெனைப்பாரா
னூரம் பலித்த விரிதினாயே
யூரம் பலித்த விருதிலையே.

சரசுவதிக்கும், முல்லைமாலைக்குஞ் சிலேடை.

அடி மடக்கு.

௩௰

ஏடு சேர்க்கு மதுகரமே
லேந்தும் போதன் பான்மலர்வா
யிருக்கு நூலி னுளுமமைந்
திருக்கு மிசையும் பொருந்துமென்றால்

நாடு வாணி போற்றளவ
நன்மா லிகையான் குகவேட
னட்பாம் வெங்க டேசுரெட்ட
னயனம் போலும் பெருங்கடலே

சாடு மனங்கன் றன்னுற்றச்
சாடு மனங்கன் றன்னேரஞ்
சகரப் பாவாய் தூற்றியவஞ்
சகரப் பாவாய் மிகச்சினப்பார்

ஓடு நாரு மிரங்கனமீ
ரோடு நாரு மிரங்கவிலை
யொருமித் திருக்க முறைத்துமெனக்
கொருமித் திருக்க மசைத்திலையே.

## இலக்குமிக்கும், மாயனுக்கும், முல்லைமாலைக்குஞ் சிலேடை.

௩௧

மாலை யாக மேற்சார்ந்து
வண்டு ளாயுந் தாமலிவாய்
வருந்தா திசையப் புல்லியெய்து
மணத்தாற் பிரியா திருப்பதனல்

வேலை மாது மாயனும்போல்
விளங்குந் தளவத் தொடைமார்பன்
வெங்க டேசு ரெட்டனெங்கோன்
விருப்பங் கூருங் கடற்றுறைவாய்ச்

சேலை வளையுந் தடவுவரே
சேலை வளையுந் தடவுவனே
திருத்தத் தாயு மடவையெனைத்
திருத்தத் தாயு மடைவிலையே

ஓலை வானை தாழைமடல்
லோலை வானை வேளெடுத்தா
னூறுங் கேணி யேழையிடை
யூறுங் கேணி யறியாயே.

## திருமால் நின்றதற்கும், முல்லைமாலைக்குஞ் சிலேடை.

### அடிமடக்கு.

௩௨

வன்னந் தவள மாகையினல்
வன்னந் தவள ந்தாங்குதல்போல்
வாய்க்குங் குழற்காம் பிசைந்ததனுல்
வாய்க்குங் குழற்காம் பிருந்ததுபோல்

முன்னந் திருமா னின்றதுபோல்
முல்லை யணிந்த புயத்தழகன்
முருகோன் வெங்க டேசுரெட்டன்
முத்தங் கொழிக்குங் கடற்றுறைவாய்

அன்னங் காள மாதலின
லன்னங் காள மாவேனே
வசை வலசீ மெலிதாமே
யாசை வலநான் மெலியேனே

சின்னந் தினமே சிலைமாரன்
சின்னந் தினமே வருத்தாதோ
தேரா வூரு மதிப்பகையுந்
தேரா வூரு மதியாதே.

## கடைமடக்கு.

௩௩

நெஞ்ச மகிழ்ந்து சேரர்வனை
நெடுந்தார் தானப் பனந்தாராம்
நிலத்திற் சோழர் வனைதாரும்
நீயார் நானா ரெனப்போமாங்

தஞ்ச மடவார் கற்புநிலை
தரிக்க விரிக்குங் கற்பையென்றுந்
தரித்தோன் வெங்க டேசுரெட்டன்
சங்க முழங்குங் கடற்றுறையே

அஞ்சம் படுக்கு முன்னீரே
யாறம் படுக்கு முன்னீரே
யார்க்கு முதவா யுடையாயே
யலர்க்கு முதவா யுடையாயே

வஞ்சம் பார முன்னாலே
மதனம் பார முன்னாலே
வரவிட் டானஞ் சம்பாலே
மயங்கு வேனஞ் சம்பாலே.

அடிமடக்கு.

௩௪

சாரி வரவே பதைத்திடமஞ்
சாரி வரவே மலைகாட்டுஞ்
சத்த மாவை யகந்துளைக்குஞ்
சத்த மாவை யகந்துளைக்கும்

பாரி லடையா ருடனடுங்கப்
பாயும் பரியா னுலகனைத்தும்
பரிப்போன் வெங்க டேசுரெட்டன்
பனுவற் கிணையாம் வாரிதியே

வாரி யார வாரமிட
வாரி யார மேதடவேன்
மணவா ளனையுங் கண்டேனே
மணவா ளனையுங் காணேனே

நீரி னுளும் வளர்குருகீர்
நீரி னுளென் றறியீரே
நிலையா வாழி தினியொழிந்து
நிலையா வாழி புகல்வேனே.

## வேறு.

### மடக்கு.

—∘∘—

௩௫

அண்டலார்கள் கொண்டபூசல்
கண்டுசீறி மிண்டியே
யாகவெற்பை மோதிரத்த
வாறெடுக்க நூறியே

விண்டராத லத்தும்வீதி
கொண்டவாசி கட்டினேன்
வெங்கடேச ரெட்டராச
சிங்கநீள் கடற்குளே

மண்டுபேர லைக்கலாம
கண்டபேர லைக்கவே
மாறுவட்ட வாறிசைப்பர்
சீறுவட்டு வாரியே

தண்டமோத மோதவேம
ருண்டுமோத மோதவே
தக்கவீர வேளென்மார்பு
தக்கவீர வாவியே.

அடிமடக்கு.

௩௬

குன்றின்மேன் மிதித்துவீரர்
மண்டைவிழ வெற்றியே
கொண்டன்மே லுழக்கிவீதி
கொண்டுபோரின் முட்டியே

வென்றபாய் பரிக்குளேறி
நின்றவீர பத்திரன்
வெங்கடேசு ரெட்டராச
சிங்கநீள் கடற்குளே

கன்றுபோன துப்புநீர
கன்றுபோன துப்புநான்
காணுமோச மத்தியானை
காணுமோச மத்தியே

நின்றபேரி தத்தரோவொல்
லென்றபேரி தத்தவே
நீடுசக்க ரத்தனேய
வேடுசக்க ரத்தனே.

## அடிமடக்கு.

௩எ

பட்டவத்த னச்செருக்கர்
பட்டவத்த மெய்தவே
பற்றெறிக்க வெற்றியுச்சி
பற்றறக்கு மைக்கமேல்

விட்டமெய்ப் பரிக்குள்வட்ட
மிட்டவுக்கி ரத்திஞன்
வெங்கடேசு ரெட்டராச
சிங்கநீள் கடற்குளே

முட்டவிட்ட சங்கமேஞக
முட்டவிட்ட சங்கமே
முன்புகுந்து தடவிதென்று
பின்புகுந்து தடவினேன்

கட்டிளைத்தெ ஞகமாசை.
யிட்டிளைத்தெ ஞகமே
கறையிலாத தங்கமேபெண்
ணிறையிலாத தங்கமே.

## வேறு.

கடலிற்குந், தலைவிக்குஞ் சிலேடை

அடி மடக்கு.

௩௮

தங்க மலைக்கு மிசைபாயத்
தங்க மலைக்கு நாவிருமா
தங்க மலைக்கு ளொளிக்கையிற்பா
தங்க மலைக்கு ந்தொனிகேட்டுத்

துங்க மறுக வடாறப்ப
துங்க மறுக வடர்களிற்றுத்
துரையாம் வெங்க டேசுரெட்டன்
சொரியுங் கொடைபோல் வாரிதியே

அங்கங் கோடி யோங்கலை
மமைவாம் வங்கங் கொண்டாயே
யங்கங் கோடி யோங்கலை
மமைவாம் வங்க மானேனே

சங்கை விடுத்துக் கடலையுந்
தனிப்பா ணியினுல் வளைத்தாயே
சங்கை விடுத்துக் கடலையுந்
தனிப் பாணியினுல் வளைத்தேனே

## வேறு.

கடலிற்குந் தலைவிக்குஞ் சிலேடை

அடிமடக்கு.

ரு௬

சேறுவண்டு கூறுகொண்டு
சேறுவண்டு சீறியே
சேரரங்க நாடவஞ்சு
சேரரங்க நாடரை

வீறுகொண்டு தானடர்ந்த
வீரதந்தி யேறினோன்
வெங்கடேசு ரெட்டன்வாய்மை
தங்கவாழு முவரியே

ஆறுகண்ட டுக்குமுன்னை
யாறுகண்ட டுக்கிலே
னாழியென்ப ருன்னையென்கை
யாழியென்ப தறிகிலேன்

பாறுகொண்டு நீயென்னெஞ்சு
பாறுகின்ற தறிகிலாய்
பங்கமுண் டுனக்குமென்பர்
பங்கமுண் டெனக்குமே.

அடிமடக்கு.

சய

மத்தகத்து வெற்பையத்தி
மட்டறப்பு டைத்திடித்து
வட்டமிட்டு மூக்கியச்ச
மக்கருக்க ளித்துரத்து

மெத்தவுக்கி ரத்தொடெற்றி
விட்டகைக்க ளிற்றினன்
வெங்கடேசு ரெட்டன்வாய்மை
தங்கவாழு முவரியே

கத்தனீகை கண்டதுண்டு
கத்தனீகை கண்டிலாய்
கற்படுத்து வருவதோசொல்
கற்படுத்த சேதுவே

நத்தமைக்க வருவையாசை
நத்தமைக்க ணடைகொளே
னஞ்சிருக்கு முன்னையெண்ணி
நஞ்சிருக்கு நெஞ்சமே,

## அடிமடக்கு.

சக

தண்டமொன்று கொண்டுகொண்டல்
தண்டியண்ட ரண்டம்விண்டு
சண்டனும்ப யந்தடங்கு
சண்டைகொண்ட திண்டுமிண்டில்

விண்டலங்கு லுங்கவெங்கும்
வென்றதந்தி யேறினேன்
வெங்கடேசு ரெட்டன்வாய்மை
தங்கவாழு முவரியே

முண்டகங்க ளுண்டுதோய
முண்டகங்க ளெங்குமே
முத்தமங் கொடுக்குமீயு
முத்தமங் கொடுப்பையோ

பண்டரங்க னன்னசாலே
பண்டரங்க னல்குமே
பயமெனக்கு திக்கும்வாரி
பயமெனக்கு திக்குமே

அடிமடக்கு.

சஉ

அந்திவான மொத்தெழுந்த
கருடகேத னத்தையே
அடுத்துவந்த சந்திரோத
யத்தையொக்கு மென்னவே

சந்த்ரகாவி டக்கயம்பி
டித்தராச கேசரி
சாமிவெங்க டேசுரெட்ட
னேமிசூற்று நேமியே

சிந்துமாலி னெந்துபார்வை
சிந்துமாலி கொஞ்சமோ
தென்றலைக் கொடுத்ததின்ன
தென்றலைக் குரைப்பனோ.

கந்தனுனி ரம்பவாய்சு
கந்தனுனி சைந்திலேன்
களவனைக் கலந்தநீசெய்
களவனைக் கிசைந்ததே.

## வேறு.

### அடி மடக்கு.

சுரு

ஆர முரசக் கரவாகத்
தணிவா ரணைய விம்முரச
மளைப்புங் கவிஞர் மகிழுமல
ரடியின் மருவார் புனைமகுட

பார முரச மும்முரசம்
பரிவாய் முழங்கு மணிவாசல்
படைத்தோன் வெங்க டேசுரெட்டன்
பரிக்குங் கொடைபோற் றிசைநிரப்பிக்

கார மரும்பைங் கடல்வெள்ளங்
கார மரும்பைங் கணையர்க்கிக்
கடுந்து மிறைத்தான் கங்குலம்ப
கடுந்து மவனை யார்தடுப்பார்

நாரம் பலமேற் கொண்டாய்மின்
னாரம் பலமேற் கொண்டேறி
நடப்பா ரதம மாயவர்முன்
னடப்பா ரதமா யிருக்கதுவே.

1233



## தலைவிக்கும், கடலிற்குஞ் சிலேடை.

### இடைமடக்கு.

சச

ஆளும் பரியு மறவெறிந்தோ
னாளும் பரிவாற் சாத்தூர
ராணை கடவா திருந்தபிரா
னல்லிக் கமல மலர்போலுந்

தாளுங் கரமு மிகச்சிவந்த
சாமி தமிழுக் கிருநிதியந்
தருமால் வெங்க டேசுரெட்டன்
சந்த்ர கிரிசூழ் பெருங்கடலே

மாளு மீன மேற்கொண்டாய்
நானு மீன மேற்கொண்டே
னூடு மணலை நீகொழித்தாய்
நானு மணலை யூர்க்கொழித்தே

னீளு மாசை நானடுத்தே
னீயு மாசை யடுத்தனை
னிலை யுஞ்சரியென் றிருந்தேனென்
னிறை யுஞ்சரியு மிழந்தேனே.

# வேறு.

## மடக்கு.

சரு

தாக்குவெண் டிரைக்கடற்
பரப்புநீர் நிரப்பியே
சங்கமேந்து கின்றதென்ன
சங்கமேய்ந்த புலவரைக்

காக்கும்ராச சிங்கம்வெங்க
டேசுரெட்ட மேந்திரன்
கையிலுண்டு சங்கரேகை
கண்டதுண்டு நாங்களும்

நோக்குபார்வை கமலமென்று
மலர்மடந்தை மேவினு
னுரையெடுத்த கமலமென்றுன்
னுரையெடுத் துரைப்பரோ

வாக்குநெஞ்சு மொத்தவன்
கொடுத்ததான தாரையால்
வந்தநீர்ப் பெருக்கினீயு
மிந்தநீர்மை பெற்றதே.

மடக்கு.

சசு

வெள்ளமே யுனக்குமுத்த
மம்பரிக்கு மிளசைவாழ்
வேந்தர்வேந்த னீகையாலு
முத்தமம்ப ரிக்குமே

கள்ளறாத குவளையுன்
னிடத்திலுண்டு பாரெலாங்
கண்டிதந்த குவளையேந்து
கருணைமாலு மாவனே

வள்ளலெங்கள் வெங்கடேசு
ரெட்டவேந்த்ரன் மருவிலான்
மையலைத் தடுப்பைநீயு
மையலைத் தடுப்பையோ

உள்ளகோட்டை யொன்றுநீ
கடப்பையோ வடர்ந்தபே
ரோங்கு கோட்டை யெண்ணிலாத
துண்டவன் கடந்ததே.

## வேறு.

### கடைத்திரிபு.

சஎ

ஆனை யடர்த்த செருக்கோட்டை
யங்கா ளொடித்தோன் கருக்கோட்டை
யாளும் பெருமான் செங்கோட்டை
யழித்தோன் மருவார் தங்கோட்டை

சேனைப் பெருக்காற் சினங்தேறுங்
திடவா னமரின் மனங்தேறுஞ்
செயமால் வெங்க டேசுரெட்டன்
செவ்வே ளெனவே பவனிகொண்டே

தானை நடுவின் முந்தானை
தனிலே யேறி வந்தானைச்
சகியா மோகந் தந்தானைத்
தடுத்தே னிலையே குந்தானை

சோனை மத்தளை ளத்திரமே
தொடுத்தா லெனக்கு பத்திரமே
சோர்ந்த துடுத்த வத்திரமே
சொல்வாய் வனச முத்திரமே.

## பாட்டுடைத்தலைவன் பவனிக்குங், கடலிற்குஞ் சிலேடை.

௪அ

ஒற்றை யாழித் தேரவன்போ
லுயர்வாஞ் சந்த்ர காவியிடா
லுதயங் காட்ட மகரமென
வோங்கு மகரக் கொடிதுலங்க

மற்றை யருவி வல்லையமு
மழைபோற் கவிய மதிபோல
வட்டக் கவிகை நிழல்காட்ட
வந்தான் பவனி யுனைப்போலச்

செற்றை யாலுங் கடலையுமுன்
செயித்தோன் வெங்க டேசுரெட்டன்
சிறைத யாலுங் கடலையுமுன்
சேது வழியாக் கண்டுநின்றே

னிற்றை நாளி லாசைதந்தா
னிறையோ னெடுந்தேர்க் காற்றுகிலே
னிந்த விரக மாற்றுகிலே
னின்றே யிழந்தே னாற்றுகிலே.

## பாட்டுடைத்தலைவன்பவனிக்குங் கடலிற்குஞ் சிலேடை.

௪௬

பாயுங் களிறு முன்னேறப்
பல்கு திரையும் பின்னேறப்
பரத் திருந்த விடக்கயமும்
பலவா ளையுமொன் ருய்கிரத்தித்

தோயுங் கனமே படர்ந்தகொம்பு
தொடும்போ திடமா னந்துவைக்கத்
தொடுத்தே செல்லுங் கவிகைமுன்னே
துலங்க வுனைப்போற் குழாங்டுவி

லாயுந் தமிழி னருமையெலா
மறிவோன் வெங்க டேசரெட்ட
னரசர் பெருமா னிளசையர்கோ
ஞனைப் பவனி வரப்பார்த்தே

னீயும் படைத்தாய் காதலையே
நின்பா லடுத்தேன் காதலையே
நீங்க வேபோ காதலையே
நிரப்புங் கடலே காதலையே

## அடியுங் கடையுமடக்கு.

௫௰

புந்திக் கினிமை யாகநிரம்
புந்திக் கணையி லொருகயமுன்
புந்திக் கெனவந் தருள்புரியன்
புந்திக் கறியப் புரந்தருள்வோன்

றந்திப் பிடரி லேறியுலாத்
தந்திப் படிமேன் மிகுங்கருணை
தருவோன் வெங்க டேசுரெட்ட
சாமி தனையே கைதொழுது

வந்தித் தவனைக் கண்டேனே
வாதித் தவனைக் கண்டேனே
வண்டு படியுங் காவிரே
மயலெப் படியுங் காவிரே

பந்தித் தாரா வினத்தாரே
பழக்கத் தாரா வினத்தாரே
பயத்தி லானைப் புள்ளீரே
பனையி லானைப் புள்ளீரே.

கடைமடக்கு.

ருக

படர வருமா லதிமதுரம்
பக்க மெனவே பலபூங்கொம்
படர வருமா லதிமதுரம்
பக்கம் வளரப் பதிகளெங்கும்

நடவே நந்த வனமமைத்து
நந்த வனமு மமைத்திடுநன்
னயவான் வெங்க டேசுரெட்ட
னுளும் விரும்புங் கடற்றுறைவாய்ச்

சடமே யசைக்கும் போதாவே
சம்போ விருக்கும் போதாவே
தனிக்க விதித்தான் போதாவே
தமியேற் கிதுவும் போதாவே

திடரின் முளைத்த முண்டகமே
திரையிற் புனலு முண்டகமே
தெளியா மயக்க முண்டகமே
சிலைவேள் கணையு முண்டகமே.

## கடைமடக்கு.

ருஉ

சேரு மாலை யங்கூரத்
தேருந் திருநா ளும்பொருந்தச்
சேரு மாலை யங்கூரத்
தேருந் திருநா ளும்பொருந்த

ஆரும் புகழு மிளசைநக
ரதனைச் சிறப்பா யமைத்துலகை
யாண்டோன் வெங்க டேசுரெட்ட
னரசர்க் கரசன் கடற்றுறைவாய்ச்

சாருங் கனைக்கு மேற்றுவரே
தாய்மார் வழக்கு மேற்றுவரே
திரைமை மீரத்து முள்ளிலையே
தமியேன் வருத்த முள்ளிலையே

காருங் கலக்கு மறியலையே
காமன் கலக்கு மறியலையே
காத லடங்கு மாசுறவே
கனைந்தே னுடல மாசுறவே.

## கடைமடக்கு.

௫௩

வள்ளம் பாரும் விழிகண்முலே
வள்ளம் பாருந் திருநுதலு
மாலைப் பிறையோ வெனமடவார்
மாலைப் பிரயோ சனமாக

உள்ளம் பொருந்து மதன்போல
வுருவ மெடுத்துப் புவிபுரக்கு
முரவோன் வெங்க டேசுரெட்ட
ணேங்கு மிளசைக் கடற்றுறைவாய்

வெள்ளம் புடைத்த தறையீரே
வேளம் புடைத்த தீறையீரே
விளாசேர் புன்னைக் கொப்பிலேயே
விடமாரு மன்னைக் கொப்பிலேயே

கள்ளுங் குடையு மாமலரே
காதுங் குடையு மாமலரே
கயத்து நாடு மலங்கினமே
கருத்து நாளு மலங்கினமே.

பாட்டுடைத்தலைவன் கொடைக்குஞ், சமுத்திரத்திற்குஞ் சிலேடை.

இடைமடக்கு.

ருச

கனகம் பொலிவாய்த் தந்தநிலை
காட்ட மேலா னவராலுங்
காணக் காவி யத்தவருங்
களிப்பா வலரும் பாணிகொண்டு

தனதா யேந்த விசைதரலாற்
சகல சனமும் பிழைக்கவன்ந்
தரலால் வெங்க டேசுரெட்ட
சாமி கொடைபோற் சமுத்திரமே

வன வாருதியே தினமனங்க
வர வாருதியே யுன்னிடத்தில்
மச்சம் பிடிக்கவிலை யுமுண்டே
மதனம் பிடிக்கவிலை வேனோ

தின மேகத்தவறி வாடே
திட மேகத்தவறி யேனே
செலுத்து மலையே நாசியுணேந்
திடத்து மலையே மறைத்தேனே.

பாட்டுடைத்தலைவன் குணத்திற்குங், கடலிற்குஞ்
சிலேடை.

கடைமடக்கு.

ருரு

தெரிய வமுதம் பழகுமதி
தெரிந்த வாரம் பிரியாமற்
சீரத் திடமு நீங்காமற்
செழிக்க வாய்மை கடவாமல்

வரிசை புரிந்து தமிழ்புனைய
வந்தோன் வெங்க டேசுரெட்டன்
மனது நிறையுங் குணம்போல
வளரும் பெரிய கடற்றுறைவாய்ப்

பெரிய மீனே சினக்கயலே
பெண்பா லெவரு மெனக்கயலே
பெருகுந் திரையிற் செல்லீரே
பிழைக்கத் தூது செல்லீரே

அரியின் மனையே மூடலையே
யமைத்தா ரெவரு மூடலையே
யரனார்க் குரித்தாங் கணைக்கூடே
யனுகேன் மலர்தாங் கணைக்கூடே.

கடைமடக்கு.

ருசு

பூரித் தவனை யேந்தியொரு
புங்கத் தவனை யொடித்துமனம்
பொருந்தத் தவனை வளர்த்துமணிப்
புயங்கத் தவனைப் பூசைசெய்தோன்

பாரிக் கிணையா நிதிசொரிந்து
ப்பாகத் தமிழைப் புனைந்துபுகழ்
படைத்தோன் வெங்க டேசுரெட்டன்
பாருக் கரசன் கடற்றுறைவாய்

வாரிக் கரையே கரைத்திடரே
மாதர் கொடுப்பார் கரைத்திடரே
மறுகு முவரி வாய்ப்படவே
வசமோ வன்னே வாய்ப்படவே

மூரித் தோணிக் குறும்பாயே
முனிவான் மாரன் குறும்பாயே
முத்தே யனைய தெண்ணீரே
மோகம் விளைவ தெண்ணீரே.

கட்டிற்குந், தலைவிக்குஞ் சிலேடை.

அடிமுதன் மடக்கு.

௫எ

சிலவா ளையுஞ்சொற் குதவுநல
சிலவா னமையும் புரந்தருள்வோன்
சிறப்பாஞ் சந்த்ர காவியிடால்
சேர்த்தோன் சந்த்ர கிரிவேந்தன்

சொலவா லமுதந் துளிக்கமொழி
சொல்வோன் வெங்க டேசுரெட்ட
தொட்ட வாரந் தவறாத
துங்க னிளசைக் கடற்றுறைவாய்ப்

பலவா யிருக்குங் கற்கடகம்
பற்று முனையே கற்கடகம்
பறிபோ னவளு நானுகும்
பயமுண் டுனக்கு மெனக்குமல்லால்

நிலவா டையுநீ பொருந்துவைய
நிலவா டையுநான் பொருந்தேனே
நீத்தங் கிளைக்கு முன்னையன்னை
நீத்தங் கிளையா ளிருந்தேனே.

## அடியுங் கடையுமடக்கு.

ருஅ

பொற்பா டக ப்பூங் கொம்பனையார்
பொற்பா டக மும் பட்டிகையும்
பொருத்தி யுடை சேர்த் தம்புயக்காப்
பொருத்தி யுடை ய வடிவாகிக்

கற்பால் விளங்கி மலர்விரிக்குங்
கற்பான் மயங்கிப் பின்றொடரக்
கண்டோன் வெங்க டேசுரெட்டன்
கல்விப் பெருமான் கடற்றுறைவாய்

முற்பா யலையே பாயலையே
முனிந்தேன் கியமே மதகயமே
மூடி வந்மே யொருவருமே
மொழியா திருந்தார் திருந்தாரே

வெற்பா கலையே யென்கலையே
விழுந்த வகைசொ லென்கலையே
வெள்ளத் தொளித்தாய் கருங்கலையே
வெதுப்புஞ் சோம வன்கலையே.

கடலிற்கும், மாதர்குழாத்திற்குஞ் சிலேடை.

கடைமடக்கு.

௫௯

பட்ரு மாமை மேற்கொண்டு
பலவாய்க் கேசங் காட்டிவரப்
பார தனத்தை வெளியாக்கிப்
பருஞ்சக் கரமா வட்டமிடத்

திடமா முனைப்போன் மாதர்குழாஞ்
செல்ல நடுவே பவனிவந்தான்
செயமால் வெங்க டேசுரெட்ட
தீர னவனைத் தெண்டனிட்டே

ஊடலு முனைப்போற் பச்சென்றே
யுடைந்தேன் மேலார்ப் பச்சென்று
யுன்னைத் தடுப்ப தெளியேனே
வுன்னோன் மனது தெளியேனே

கடலா யோகோ வந்தாயே
கடின மோகோ வந்தாயே
கனாவா யிடத்த திருப்பாயே
கலந்தா யிரங்கா திருப்பாயே.

## கடைமடக்கு.

௬௰

கனத்துப் புடைத்துப் பருத்துவிம்மிக்
காம்பு திரண்டு கண்கறுத்துக்
காமன் மகுடம் போற்பார்த்து
கச்சுக் கடங்காக் கனதனத்தார்

மனத்துக் கிசைந்த வடிவழகன்
மதவேள் வெங்க டேசரெட்டன்
வைகை நதியும் வைப்பாறும்
வந்து பெருகுங் கடற்றுறையே

யுனக்கு ளேவா சஞ்சலமே
யுள்ளத் துளவா சஞ்சலமே
மொழியா துப்பு மயக்கம்மே
யுண்டே துப்பு மயக்கம்மே

சினத்து மோது வரியாரே
தெரிந்து மோது வரியாரே
தேனுக் கோட மலைத்தேனே
சித்தங் கோட மலைத்தேனே.

## கடைமட்க்கு.

சுக

கொப்புங் குழையுந் தாவுமரங்
குறித்த மலரைப் பறித்துநெடுங்
கொப்புங் குழையுந் தாவுமரங்
குறித்த விழியார் செறித்தமுலை

செப்பு முலைமேல் வைத்தணைப்பார்
செயமால் வெங்க டேசுரெட்ட
தீரன் பவனி பார்ப்பார்நான்
திரும்பிப் பார்த்தேன் பெருங்கடலே

யுப்பு விளைக்கு மளப்பாரே
யூரா ரளப்பு மளங்பாரே
யுள்ள முழக்கந் தருந்திரையே
யுள்ளுக் கிறங்கா தருந்திரையே

துப்பு வளர்வ தாங்கரையே
துகிலை யிழந்த தாங்கரையே
துறைவாய் முடுக வருமனமே
தொலையா மயல்க வருமனமே.

## அடிமடக்கு.

௬௨

பொன்னம் பொருப்பை நேராகப்
பூவை தாங்கும் புயங்கமெனும்
பூணுஞ் சேரு மறுகாலப்
போது மறுகா னீங்காம

லின்னம் புலவர்க் கமுதளிக்கு
மெங்கோன் வெங்க டேசுரெட்ட
னெய்தும் பவனி பார்த்தேனம்
பெய்தா னென்மேன் மதன்கடலே

யன்ன மிறங்கப் படுதிரையே
யன்ன மிறங்கா திடுதிரையே
யலரி கலைமா மதிக்கரவா
யலரி கலைமா தரும்புரிவார்

கன்னங் கருமைப் புணரியெனக்
கன்னங் கருமைப் புனனலைக்குங்
காதற் றுயும் வண்டேயென்
காதற் றுயும் பகைத்தாளே.

மஹாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

அடிமடக்கு.

—

கூங

பார வரையு மேந்தியிந்தப்
பார வரையு ம்புரந்துமுக்கட்
பண்ண வரையும் வணங்கியிசைப்
பண்ண வரையும் வளர்த்தறிவு

கூர வரையா தியலறிந்து
கொடுப்போன் வெங்க டேசுரெட்டன்
கொற்றக் கவிகை நிழற்றமத
குவட்டிற் பவனி வரப்பார்த்தேன்

வார மறி யாயிப்பிழுத்தம்
வார மறி வாய் கருங்கடலே
வணக்க மறி வா யுன்னிடத்தில்
வணக்க மறி யலாயிருக்குங்

கோர மியத் தால் விளைப்பையெனக்
கோர மியத் தை விளையாயே
கொடுமைக் கிடமா யிருப்பாயென்
கொடுமைக் கெவரா யுரைப்பேனே.

அடியுங் கடையுமடக்கு.

௬௪

காரி யனைய கொடைக்குமுப
காரி தமிழ்பா ராட்டும்விப
காரி மதியோ சனையாலுங்
காரி யகரு மம்பகர்வோன்

வேரி வனசத் திருமாதை
விழியு ளிருத்திப் பகையனைத்தும்
வென்றேன் வெங்க டேசுரெட்டன்
மேவு மிளசைக் கடற்றுறைவாய்

வாரி முகட்டி லெழுகலமே
வளைபோ னதுவு மெழுகலமே
வந்தால் வருமீ சுரப்பாறே
மைய லெனக்குஞ் சுரப்பாறே

நீரி னூறு மீன்புலவே
நெடுநாட் செலுமோ நான்புலவே
நெய்தற் படருங் கொடியாரே
நேய ரனைமார் கொடியாரே.

## க டை ம ட க் கு.

௬௫

வருந்துஞ் சனகி முகம்பார்த்து
வரிவிற் பலத்தைப் பின்பார்த்து
மணிக்கோ லஞ்செய் திருந்தவன்வேள்
மணக்கோ லஞ்செய் ததைப்பாரான்

திருந்து வளையும் போச்செனவே
தெரிவை மாதர் மயலாகுஞ்
செயவேள் வெங்க டேசுரெட்ட
தீர னிளசைக் கடற்றுறைவா

யிருந்த திடனு கக்காவே
யென்னைத் திடனு கக்காவே
யேற்ற தாலத் திடத்தூரே
யேசுந் தாலத் திடத்தூரே

பொருந்து மணவின் வாய்த்திட்டே
பொறுப்பே னேதாய் வாய்த்திட்டே
புதிதா மதியா நந்தினமே
பொருகா மதியா நந்தினமே.

## கடலிற்குந், தலைவிக்குஞ் சிலேடை.

### அடிமடக்கு.

௬௬

கச்சங் கடக்க வடங்காக்கொங்
கைக்கும் பசலை பொருந்தியனங்
கைக்கும் படிக்கு மிருந்துமடல்
கைக்குந் தரிக்க வெண்ணிமதி

யுச்சம் பார்க்கு மடவார்க
ளுள்ளங் கவரக் காமனைப்போ
லுதித்தோன் வெங்க டேசுரெட்ட
னுலாவப் பார்த்தேன் பெருங்கடலே

யச்சங் கூரு முன்னிடத்தி
லச்சங் கூரு மென்னிடத்தி
லம்பா லசை வாய் நீயுமத
னம்பா லசை வுமெனக்குண்டே

மச்சங் கடவா துன்னையுங்கா
மச்சங் கடவா தெனக்குமுண்டாம்
வணங்கா ராகு முனக்கெனக்கும்
வணங்கா ராகு ஞ் சிலதியரே.

கடைமடக்கு.

சுஎ

பாரம் பரிய மவன்குணத்தைப்
பூரம் பரியாக் கொண்டவற்குப்
பாரீவை கொடுத்தான் கங்கைகொண்ட
பார்ப்பான் பார்ப்பா னென்றுசொலத்

தீரந் தருகண் கொடுத்தவதி
செயவான் வெங்க டேசுரெட்டன்
றிருமால் போலப் பவனிவந்தான்
சென்று தொழுதேன் பனிக்கடலே

நாரம் பொருமுன் னடுக்கலையே
நானும் படைத்தே னடுக்கிலையே
நண்டு நடந்த துறைப்பாலே
நலிந்தேன் விரகத் துறைப்பாலே

வார மடுத்தா ளுக்குண்டே
மாதர் பொறுத்தா ளுக்குண்டே
மாரன் பொருவன் மஞ்சினமே
மாறு னேவன் மஞ்சினமே.

## கடைமடக்கு.

சுஅ

மாரி யாக நிதிமிகவும்
வழங்கி யாக நடத்திவளர்
மகமே சனன மானதனுல்
மகவா னிவனே யெனத்துதிக்கப்

பாரி லரசு செய்துசெல்வம்
படைத்தோன் வெங்க டேசுரெட்டன்
பவனி வரநா னெதிர்நடந்து
பார்த்தேன் பரவா யுனைப்பார்த்தேன்

சூரி யனையே கரந்தாயே
சொல்லில் வெகுமுட் கரந்தாயே
தோணி தொடுத்த மயக்கங்கே
தொடர்ந்த தெனக்கு மயக்கங்கே

நீரின் மிகுந்து நிலையாயே
நின்றேன் பெரிரமுன் னிலையாயே
நீயோ வேது வெதுப்பாயே
நீத்தேன் மலரப் புதுப்பாயே.

## கடைமடக்கு.

---

சூக்ஷ

விளையு மதவா ரணமுகிலா
மின்னார் பலரு மயிலாக
மேக வூர்தி யிவனாக
விழியா டாம னிற்பதனாற்

றளையின் மடவா ரரம்பையராத்
தருநா யகனு மிவனாகத்
தானே வெங்க டேசுரெட்ட
சாமி பவனி வரப்பார்த்தேன்

கரையி லிருக்குந் தாராவே
கதிரை மறைத்த தாராவே
கடலே திரையு மாற்றுவையே
கடுத்த முழக்க மாற்றுவையே

யிளையு மீன்பாய் சினவளையே
யென்சொல் வேளைன் சினவீளையே
யிசைந்த நிலவைப் புத்துகிலே
யிறங்கு முலைவைப் புத்துகிலே.

## உவமைவிலக்கு.

### கடைமடக்கு.

எய

காம னிவனே யென்னிலவன்
கறுப்ப னிவனைச் சிவப்பனென்பார்
காளை வேல னென்னிலவன்
கண்ணீ ராறுங் கலந்திருப்பான்

பூமன் னவனா நிகருனாயாப்
பூமான் வெங்க டேசுரெட்டன்
புகழ்சே ரெட்ட புரந்தழைக்கப்
புருகூ தனைப்போல் வரக்கண்டேன்

சோமன் றனக்கு மாமனையே
துணையா யிருக்கு மாமனையே
சூழும் புவிக்குள் வளைபட்டே
துடித்தேன் மதனல் வளைபட்டே

யாமன் மதன்சேர் வைப்பறையே
யார மணிசேர் வைப்பறையே
யாழ நிலையாப் பயனிலையே
யன்னை யாலும் பயனிலையே.

## கடைமடக்கு.

எக

புயமா னதுவு மிருவனையே
பொருந்தும் பூமா னிருவனையே
பொறுப்ப தசோதை யோரடியே
பூமி யளந்த தோரடியே

தயவாய் வளர்ப்ப தெம்மையவன்
றனே வெங்க டேசுரெட்ட
சாமி விஜய தரராம
சாமி போல வரப்பார்த்தே

னுயர்வாம் பணியின் மேற்காயே
யுதிக்கு மதிய மேற்காயே
யோலைப் பூவில் வருந்தாதே
யொருவர் தேற்றில் வருந்தாதே

கயமேல் வருமிக் கனவாயே
காண்ப தெனக்குக் கனவாயே
கழுநீர் விடுத்தெய் தானறவே
காமன் கணையெய் தானறவே.

கடைமடக்கு.

எ௨

பெலப்போ ரிடவே யெதிர்த்தவர்க்குப்
பிலமும் விசும்புங் குடியாக்கிப்
பிழையி லாத தமிழோர்கள்
பிழைக்குந் தரமா நிதிசொரிந்து

சொலப்பா மதுர மறிந்தகல்வித்
துறையாம் வெங்க டேசுரெட்ட
துங்கன் பவனி வரப்பார்த்துத்
தொழுதேன் றொழுதே னெடுங்கடலே

கலப்பாய் விடுத்த துசமரமே
கடின மருத்த துசமரமே
கலக்கு மலைக்கு மேற்றுளியே
காமன் கணையு மேற்றுளியே

நிலப்பான் மணவி றுணைலையே
நினையே னமுதி னுணைலையே
நீரிற் கிடக்கு முதலையே
நீங்கே னேவிம் முதலையே.

அடியுங் கடையுமடக்கு.

எஙு

தஞ்ச மதிக்கு மடமாதர்
தஞ்ச மதிக்கு மாமெனவே
சமர சமுகம் பார்ப்பர்மதன்
சமர சமுகந் தனைப்பார்த்துக்

கெஞ்ச மதவெற் பினிலுதய
கிரிமேற் கதிரோன் போன்றுசந்த்ர
கிரிவாழ் வெங்க டேசுரெட்ட
கீர்த்திப் பெருமான் பவனிவந்தான்

கஞ்ச னிறங்கா வாகனமே
கனக னிறங்கா வாகனமே
கைமேற் சாய்த்தே னம்பரமே
காணோன் மெலிந்தே னம்பரமே

யஞ்ச மலைத்தேன் பரவையே
யறிவே னுனுன் பரவையே
யாழி கோப மடங்காயே
யதிர்த்தாய் நூறு மடங்காயே.

அடிமடக்கு.

எச

அங்கங் குடனு டாதிபர்க
ளங்கங் குடனு டியும்வரப்பா
ரனைத்தும் புரந்தோ னன்பாலே
யனைக்கு நிகரா வெனைப்புரந்தோன்

றங்கமலை த்தின் புயன்வனசந்
தங்கமலை க்குத் திருநயனந்
தந்தோன் வெங்க டேசுரெட்டன்
றழைக்கு மிளசைக் கடற்றுறைவாய்

வங்கங் குலாவ வருவையுன்கோ
வங்கங் குலாவி வினைவளர்க்கு
மணக்கு முதவி சாலமென்னை
மணக்கு முதவி சாலவைப்பாய்

துங்க வலையே மனதுபொருந்
துங்க வளையான் மெலிவேனே
தோயத் திசை வாய்த் திசைமுழுதுந்
தோயத் திசை யோ கந்தாவே.

அடிமடக்கு.

எடு

துரையே கொடுக்குந் தயாபரம
துரையே புரந்த பாண்டியமூ
துரையே வளர்த்த செயதரச
துரையே படைத்த செகவீரா

நிரையே பிழைக்க மலையெடுத்த
நிருபா வெங்க டேசுரெட்டா
நின்னைத் தொழுவோ மெனமடவார்
நின்முர் நானு மெதிர்நின்றேன்

திரையே திரையிற் படிந்திளங்க
திரையே யொளித்தாய் மாலெனுமுத்
திரையே தரித்தே னவன்கணையே
திரையே கொடுத்த தறியாயே

கரையே கடவா துலாவியகோக்
கரையே மடவா ராகியமூர்க்
கரையே நினைத்து மாலையிற்செக்
கரையே குறித்தும் பயந்தேனே.

அடிமடக்கு.

எசு

கூரா ழியைக்கைக் கொண்டவன்போற்
கொற்றக் குடையி னிழலில்வந்த
கோமான் வதன மதியின்மின்னர்
கோமான் போலக் குதிக்கவிட்டு

வாராய் தளவந் தாராய்பொன்
மருமா வெங்க டேசுரெட்ட
மகிபா வென்றே பற்பலரும்
வணங்க நானும் வணங்கிநின்றேன்

பாரா வார மேவிரகம்
பாரா வார மேவலராம்
பணில வுவரி யன்னேசினப்
பணில வுவரி ஞன்மெலிவே

ஞாரா வலறி யுந்தரஙீ
வாரா வலறி யுந்தரத்தா
யம்பா யுததி யாவாய்வே
ளம்பா யுததி சயம்பாரே.

## அடியும் இடையுமடக்கு.

எஎ

துரந்த ரீக புரந்தரவேள்
துரந்த வாறு மறிந்திலேயே
சோமத் தலையைத் தரித்தாயே
சோமன் வருத்த மாற்ருயே

நிரந்த கருணைத் தயாநிதியே
நீதா வெங்க டேசுரெட்டா
நீதா முலையை யெனமடவார்
நின்ருர் நானுங் கூடநின்றேன்

பரந்து புடைக்கு ங்கரையேபொன்
பரந்து புடைக்கு முலைக்கணிந்தேன்
பார்வைத் துடுக்கும் புடைவையனை
பார்வைத் துடுக்கும் பொறுப்பேனே

வரம்பு வாரிதம்ப மற
மயக்கு வாரிதம்ப பகரார்
வருத் தக்கதறியே னுனக்கு
வரத் தக்கதறியே ன்புகலே.

## கடைமடக்கு.

எஅ

தருவா னெனவே தமிழறிந்து
தருவா ன்களிவண் டலம்புமுல்லைத்
தாரா ன்சமரின் முதுகுபுறந்
தாரா னேரார் தமையடக்க

வருவா னமரா வதிபுரக்கு
மகவான் போலச் சந்த்ரகிரி
வந்தோன் வெங்க டேசுரெட்டன்
மதவா ரணத்திற் பவனிவந்தான்

குருகார் தடத்துக் கம்புள்ளே
குலுங்குந் தடத்துக் கம்புள்ளே
குத்த விடுத்தா னுங்குளமே
கூட விடுத்தா னுங்குளமே

யருகே பாயுந் தனிக் குறவா
யுன்னை மாரு மெனக் குறவா
யன்பு புரியார் மீன்றாரே
யவரோ வெனையு மீன்றாரே.

## கடைமடக்கு.

எசு

கண்ணன் போல வருகமலக்
தண்ணன் பார மூலைமடவார்
காமன் போல வளர்ந்துதெய்வக்
காமன் போல ப்புவிபுரந்து

திண்ணந் தோன்றச் செங்கோன்மை
செலுத்தி யரசு புரியுமதி
செயவான் வெங்க டேசுரெட்ட
தீர னிளசைக் கடற்றுறைவாய்

வண்ணந் தருகா வித்தாரே
மாத ரெனைக்கோ வித்தாரே
வளருங் கனையோ டத்திடமே
வருமோ பயமோ டத்திடமே

யெண்ணந் தருவா ளைக்காணே
னெடுக்கு மதன்வா ளைக்காணே
னிளைத்தே னென்ப தறியாயே
யிரங்கா ளென்ப தறியாயே.

அடிமடக்கு.

அய

சங்கோ விடமும் முரசதிரத்
தாரை யிரையத் தவின்முழங்கச்
சத்த மிடுபே ரியுந்துவைக்கத்
தந்தா வளத்தின் மிசையேறி

யெங்கோன் வெங்க டேசுரெட்ட
னெழுந்தான் பவனி மாதரெல்லா
மெதிர்போய்த் தொழுதார் நானுமவ
னெழி லும் வடிவுஞ் சோதித்தேன்

செங்கோ கனகத் திருநயனஞ்
செயமான் வலது புயம்வினைத்
திறவான் மருங்கி லிருந்தார்கள்
சேரு மாத ராரென்றேன்

கங்கோடி கலுங் கடலேயங்
கங்கோடி யுமால் தொடர்ந்ததுசங்
கங்கோடி யுமுண் டகன்றதுமு
கங்கோடி யுநா னிருந்தேனே.

அடிமடக்கு.

அக

நிலப்பா வையைத்தா ளாலளந்த
நெடுமால் வெங்க டேசுரெட்ட
னிருபர்க் கரசன் பவனிமுன்னே
நின்றேன் மயலா யவன்புயத்தைக்

கலப்பா ல்விரும்பிக் கிளைக்கோான்
கலப்பா ல்விடுத்தே னெனக்குமுன்பு
கலப்பா லுரைப்பே னெனவதற்குக்
கழற வதுவு மறுத்தெனக்குச்

சொலப்பா வையளை நான்பார்த்தேன்
சோதி முகத்திற் கொடுகொடுப்புந்
துணைமான் விழியிற் சிவப்புமிதழ்த்
துடிப்பு மனத்திற் கடுகடுப்புஞ்

சலப்பார் வையும்பார்த் தேர்மதனன்
றுணை யாமா லவரெனக்குத்
தாணை யாமா லுரைப்பாரோ
தானே போன தறியாரே.

## தூதுவிலக்கு.

மடக்கு.

அஉ

அன்னந் தனையே தூதுவிட்டா
லரசர் பெருமான் கொடைமாரி
யாமென் றுரைப்பா ராசையினு
லங்கி தடுக்க மாட்டாதே

யின்னங் குயிற்குச்சொல்லிலதை
யீன்ற தாயுங் கொடிய தென்றே
யிகழும் வளர்த்த தாய்கொடிய
தென்பா ரிரங்க மாட்டாதே

பொன்னம் பொறிவண் டாயின்மயல்
புகலக் காது கேளாதே
போர்வேள் சிலைக்கு நாணுமது
போவென் றுரைத்தாற் போகாதே

மன்னன் குமார வெட்டன்மகிழ்
மகவாம் வெங்க டேசுரெட்டன்
மாலை கொடுப்பான் கடலேசெம்
மாலை யடுத்து நின்றாயே.

மடக்கு.

அரு

தென்ற றனையே தூதுவிட்டாற்
றிரும்பி வரவு மாட்டாதே
செம்மை யிலையே பசுமயிலைத்
தேடித் தூது விடுப்பேனே

வென்ற பொழுது நீதானே
யிரங்கி யெதிரே வந்ததுபோ
லெனக்கு முயிர்நீ தந்ததுபோ
லெட்டுத் திசையு மமராடி

வென்ற பெருமா னிளசைவரும்
வெங்க டேச ரெட்டமன்பொன்
மேருப் புயத்தை நான்மருவ
வேளை கிடைக்க வேளைவெல்ல

மன்றல் கமழுங் குழலியிங்கே
வந்தாள் கடலே யுன்னையவள்
வடிவிற் பார்த்தே னங்கசக்க
வடிவிற் பார்க்க வேண்டாமே.

## தலைவிக்குங், கடலிற்குஞ் சிலேடை.

அசு

கூந்தற் பாசி யுன்னிடத்திற்
குலவு மதிய முகம்விழிமீன்
குமுதம் வாய்முத் தெயிறுகுழை
குதிக்கு மகரங் கழுத்துவளை

யேந்து தோணி குத்துகழை
யிரண்டு தோள்செம் பவளம்விர
லிணைத்த முலைகண் மணற்குன்ற
மெய்து நாபி நீர்ச்சுழியாம்

போந்த நாக நிதம்பநண்டு
போன்ற முழந்தாள் வரால்கணைக்கால்
புறந்தா ளாமை விரல்களிறு
பொருந்து மெகினம் போலுநடை

சாந்த மூழ்கும் புயத்தில்விந்தை
தரித்தோன் வெங்க டேசரெட்டன்
சமுகங் காண வருமாதுன்
றனைப்போ லிருந்தாள் பனிக்கடலே.

மடக்கு.

அரு

கடலே யுன்போல் வந்தவளைக்
கண்டேன் மகிழ்ந்தேன் வார்த்தையுங்கற்
கண்டே யுரைப்ப தெல்லாநி
கண்டே யெனவுங் கண்டேனே

யுடலென் பசந்தா யென்றுளா
ருறவென் பசந்தா யுரைக்கவெனக்
கொருவ ரிலாத வாறென்றே
னுள்ள தெனவே தலையசைத்துத்

திடமே புகன்றுள் புவிபுரந்த
செயமால் வெங்க டேசுரெட்டி
திரன் கொலுவிற் சென்றுளென்
செய்தி யுரைத்துன் பவனிகண்ட

தடமென் முலையார் பொதுமாதர்
தம்மி லொருத்தி பதுமினிப்பெண்
டாமங் கொடுக்க வேண்டுமென்றுள்
சாமி கருத்து மிசைந்தானே.

## மடக்கு.

அசு

ஆழி யிடத்தி லிருந்தானொன்
றவளு முரைப்ப மகிழ்ந்துகணே
யாழி கொடுத்தா னதனுடனே
யுதிக விலைமுத் தமுங்கொடுத்தா

னூழி காலம் வாழியென
வுரைக்கத் தூதி யெமைப்புரக்கு
முறவோன் வெங்க டேசுரெட்ட
னுகந்த வெகுமா னமுங்கொடுத்தான்

சூழி யானை யென்றமுலைத்
துணேமே லேற்றி முரசமெனத்
தொனிக்குஞ் சிலம்பு மலம்பவளை
துகிலுந் தரிக்க மனைக்குள்வந்தேன்

வாழி யெனவே நானிருந்தேன்
மாரப் பயலும் புறம்போனுன்
மைய லொழிந்து கண்பொருந்தி
மன்னன் வரவுங் கண்டேனே.

## மடக்கு.

அஎ

கனவில் வருமன் னவனெனது
கையைப் பிடித்து மடியில்வைத்துக்
கார்போற் குழலைக் கோதியவன்
கையான் முதுகைத் தடவியுமென்

மனது குளிர முன்புசுருள்
வழங்கி யவனே பின்புமுத்தம்
வழங்கித் தலையை வளைத்ததர
மாறிச் சுவைத்தான் வகைக்காரன்

சனகன் மகளை மணம்பொருந்துந்
தாமோ தரன்போ லிருபுயமுஞ்
சாதி வனசக் கண்மலருஞ்
சந்த்ரோ தயம்போற் றிருமுகமு

மெனது விழியிற் குளிரவுங்கண்
டிருந்தேன் வெங்க டேசுரெட்ட
மேந்த்ரன் கலவி தனைக்கடலே
யின்னம் புகல்வேன் கேட்பாயே.

அடிமுதன்மடக்கு.

—

அஅ

கலச முலையைத் தொட்டெனையுங்
கலச மதியா மெனிற்பிடித்துக்
கசக்கு முலைக்காம்பை யும்பருகக்
கசக்கு மெனவு நினையாதே

சலவை யுரியே னுயர்ந்தபுயா
சலவை யினுநான் விடுவேனோ
சவாது வழித்துக் கழுத்தினிற்பூ
சவாதே ரிதழ்பருகு

புலவித லையே நினைப்பதுநான்
புலவித லவோ சமயமென்றே
புகழ்சேர் வெங்கடே சுரெட்ட
பூபா வுனையே நானினைந்தே

னிலவா னதுவுங் குளிரமந்தா
நிலவா சமுவந் தடிக்கவுநா
னினைப்பா யலிலே மருவவுநீ
நினைப்பா யலிலே யென்றேனே.

## அடிமடக்கு.

அகூ

சேலை யுரிந்தான் கடிந்துவிழிச்
சேலை யுருட்டிப் பார்க்கையிலே
செவ்வா யிதழைக் கொடுத்தானுன்
செவ்வா ய்நீவிப் பற்பதித்தேன்

மாலை சரிந்த பிடரிநுக்குள்
மாலை யமைந்த பிறைபோல
வைத்தான கத்தைக் கவுளையுஞ்சு
வைத்தான யமிதென் றுரைத்தேன்

காலை யிடுப்பி லிறுக்கியொருக்
காலை வகையா லிங்கனத்தற்
கட்டி யணைக்கத் தொடுத்தவகைக்
கட்டி சொலவு மனம்வருமோ

வேலை யெடுத்த திரைக்கடலே
வேலை யெடுத்த முருகனைப்போல்
வெங்க டேசு ரெட்டனெனை
மேவச் சமயம் வாய்த்ததுவே.

அடிமடக்கு.

௬௰

சுரதஞ் செயவே கடிதடவிச்
சுரதந் தனையே தொட்டதுமீ
சுரதந் திரமா மதனையுமீ
சுரதந் திரமென் றெண்ணோனே

சரசஞ் சொலியே நகைத்ததுமிஞ்
சரசந் தானே முடித்ததுபூச்
சரசம் பிரம வேளெடுத்த
சரசஞ் சலமுந் தவிர்ந்தேனே

கரகஞ் சமுமென் முலையான
கரகந் தொடுமப் போதிலநங்
கரகந் தையும்போய் விட்டதரா
கரகந் திருவ மணமிதுவே

யரவந் தருபுட் குரன்முழங்க
வரவந் தனிலே நடித்தமுகி
லர்மால் வெங்க டேசுரெட்ட
னதுபோ கத்தைத் தொடுத்தானே.

## வேறு.

### மடக்கு.

கூக

மடியில்வைத்து முலேபிடித்து
வலியமுத்த மிடமுகத்தில்
வதனம்வைத்து மதனவித்தை
வகைபிறக்க வவனுரைத்து

முடியுறைக்க நகமழுத்தி
முதுகினிற்கை படவணைத்து
முறுகிமெத்த விறுகிவெட்க
முழுதும்விட்டு மெலவசைத்து

நெடியபுட்கள் குரலெழுப்பி
நிலேதரித்த விழியிமைக்க
நினைவுமற்ற பரவசத்தி
னிறைவெனக்கு வரமயக்கி

விடியுமட்டு மதுபவித்து
வெங்க டேசுரெட்டமன்
விரகதாப மதுதணித்த
வேளைநல்ல வேளையே.

## அடிமடக்கு.

கூ௨

தந்திதங் கலந்துகண்ட
தந்தரங்க மென்றுசந்த
தந்திடம் புரிந்தணைந்த
தந்திரந் தெரிந்திசைந்து

பந்தெழும்பு கின்றதென்று
பந்திகொண் டெழும்பவுஞ்சு
பந்தருஞ் சுகம்பொருந்து
பந்தயங்க ளும்பகர்ந்து

வந்துவந் திருந்தகொங்கை
மந்தரங் குலுங்கவண்டு
மண்டுகொண்டை கொண்டலென்று
வந்தொதுங்கு சண்டைகண்ட

விந்தைவிந்தை யென்றியம்பி
வெங்கடேசு ரெட்டமன்
விரகதாப மதுதணித்த
வேளைநல்ல வேளையே.

மடக்கு.

௯௩

ஒருதரத்தில் விடலைப்பி
னுபரிவித்தை முதனடத்தி
யுகிர்செலுத்து கரிகரத்தி
லுரகனுச்சி மணியசைத்து

மருவியுப்பு மமுதுடைத்து
வரவெழுப்பி யதிலெனக்கு
வலுமயக்கம் வரவிரித்து
மலரணைக்குள் விழவுயர்த்து

மிருதொடைக்கு ளவனிருக்க
வெணைமலர்த்தி முலைசுவைத்து
மிதழ்சுவைத்து மொருதரத்தி
லிருவருக்கு மனம்ருசிக்க

விருதுகட்டி யநுபவித்து
வெங்கடேசு ரெட்டமன்
விரகதாப மதுதணித்த
வேளைநல்ல வேளையே.

## மடக்கு.

கூச

அப்புறத் தொதுக்கடிக்கு
மத்தொழிற் கொருப்படுத்தி
யக்கணத்தி னிற்றொடைக்கு
ளெப்படிப் படுத்தெழுப்பி

யிப்புறத் திழுத்தொருத்தி
யெப்படிச் சமத்திகெட்டி
யித்தனைக்கு முத்தரித்த
திப்படிக் கெனப்படப்பை

குப்புறக் கிடக்கும்வித்தை
குற்றமற்ற வித்தைகுத்து
குத்தெனச் சொலச்சொலிக்
கொடுத்துறைத் தடுத்தடுத்து

மெய்ப்புறத் தொழிற்பயிற்றி
வெங்கடேசு ரெட்டமன்
னிடியுமட்டு மநுபவித்த
வித்தைநல்ல வித்தையே.

# வேறு.

## தலைவனைச் சேர்ந்தவகைக்குங் கடலிற்குஞ்சிலேடை.

கூரு

மடிமே லேந்தி மலர்வாய்த்தேன்
வழங்கித் தனபா ரத்துகிரும்
வைக்கத் தனமே கசக்குமென்று
மணிவாய் முத்தம் பலகொடுக்கக்

கொடியி னிடைகால் விசைத்தெழும்பிக்
கொள்கப் பலைப்பா யசைக்கவந்து
கூட வரைச்சோ மனுங்தோயக்
கொட்டு மயிர்தங் கொப்பவிக்கப்

படியை யளந்த காலாற்கற்
பாறை மிதித்து மடமாதைப்
பார்த்து முனியே திதுவெனவே
பகர்ந்தோன் வெங்க டேசரெட்டன்

றடியு முனையும் படைத்தவெற்றித்
துரையைச் சேர்ந்த விதம்போலத்
தோற்றுங் கடலே நானுனக்குச்
சொல்லிக் காட்ட வேண்டாமே.

## மடக்கு.

கூசா

கையான் முகத்தைத் துடைத்துமலர்க்
கண்ணு லெனையும் பார்த்துமறு
காலால் வண்டு குடைந்தமலர்க்
கணியை யெனது குழற்கணிந்து

மெய்யா னதையே தடவியென்றன்
மேலே யிலங்கு முடைமையெல்லாம்
வெவ்வே றாகக் களைந்ததனை
மீட்டு நிரையாத் தரித்துமங்கே

னையா விடையைத் துகிலாலே
நன்றாப் பொதிந்து மனம்விரும்பி
நகைத்தான் வெங்க டேசுரெட்ட
ஞனு மகிழ்ந்த வனைப்பார்த்தேன்

மையார் விழியார் தமைக்கலவி
வகையா லுருக்கி வசப்படுத்து
மார்க்க மவனுக் கல்லாமல்
மாரன் றனக்கும் வாராதே.

## கடலிற்குந், தலைவிக்குஞ் சிலேடை.

௯௭

அறல்போற் குழலைக் கோதிமதி
யத்துபோல் வட்டத் திருநீறு
மமைத்துக் கதிர்போற் சிந்தூர
மதனால் வளைத்துப் பொட்டுமிட்டுத்

திறமா கியமுத் தாரமுன்னே
திருத்தி மணற்குன் றிடைமேகந்
திரண்ட தெனவே நீலரத்னச்
செழுங்கச் சாலே முலைமறைத்து

நிறமே வியசங் கமுர்தரித்து
நிரையா கியபன் மணியாலும்
நிரப்பி நுரையார் அகில்பொருத்தி
நீங்கா மணமுந் தோன்றுதலா

லுறவா னவர்க்குத் தாயகம்போ
லுதித்தோன் வெங்க டேசரெட்ட
னோசைக் கடலே யுன்போலென்
னுருவங் காட்டக் கண்டேனே.

## கடைத்திரிபு.

௯௮

கருப்பஞ் சிலையு மோர்கரமே
கண்டே னுனுஞ் சூகரமே
காமப் பயனு மூட்கரமே
கணையைத் தொடுப்பான் சிக்கரமே

வருத்தம் புரிவா ரனேகரமே
வல்லார் மடவார் நிசகரமே
மாமால் வெங்க டேசுரெட்டன்
வருவான் வருவா னென்றிருந்தேன்

திருத்தும் படிக்கு மனோகரமே
செய்தா னினித்தி வாகரமே
தினியில் வருவா யெனக்கரமே
தெரிய வுதித்தான் சக்கரமே

பொருத்தந் தருங்கண் ணுகரமே
போர்வேட் கிலவி ராகரமே
பூவை மாருஞ் சேகரமே
புகழ்ந்தே னிரத்தி னுகரமே.

# கடைத்திரிபு.

சீசீ

தருண மறிவாய்ப் புக்கலமே
தக்க தெனவுன் னடைக்கலமே
சார்ந்தே னெனக்குப் புட்கலமே
தந்தா யைய வனகலமே

மருவ வாவே யிருகலமே
வணங்கே யெனவிப் பகலமே
வாவென் றுடா யொருகலமே
மலளை விரித்தாள் சிவன்கலமே

திருமா லமுதின் பரிகலமே
சேரு முனையே மரக்கலமே
சேர்ந்த தெனையு மணிகலமே
தினமு நாங்கள் பிரிகலமே

யருமைத் தமிழாஞ் சகலமே
யறிந்த துளைபூ வினகலமே
யளந்தோன் வெங்க டேசரெட்ட
னணைந்தா னதுமா மங்கலமே.

## கடைமடக்கு.

## வாழி.

ள

கண்ட கன்வுந் தப்பாமற்
கர்ம சரம்வந் தப்பாமற்
கண்டாள் விழிக்கு முன்னவனைக்
கண்டே னிள்ளைச் மன்னவனைக்

கொண்ட வெல்லவே தெரிசித்தே
கொண்டே னிதவுந் தெரிசித்தே
கோமான் வெங்க டேச்செட்டன்
கொண்டலைப் புகழ்ந்தே னென்னைப்புரக்கு

மண்ட லீகன் வாழியவன்
மகவாஞ் செகவீ ரெட்டமனும்
வாழி துரைகள் கிளைஞர்பிள்ளை
மாரும் பரிவா ரமும்வாழி

யண்டர் தமக்கோ ரமுதாகி
யவனி தனக்கோ ருப்பாகி
யமைந்த வாழி வாழியெங்கோ
னணிந்த வாழி வாழியவே.

சமுத்திரவிலாசம் முற்றுப்பெற்றது.

MAHAMAHOPADHYAYA
...NATHA IYER LIBRARY